# தலைவர் கலைஞர், இந்திய இலக்கிய முகமாக அங்கீகரிக்கப்படும் நாள் இது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

அதனால்தான் உலக அளவிலான பல்வேறு பல்கலைக்கழகங்கள் J.N.Uவோடு இணைந்து பணியாற்ற விரும்புகின்றன. அதனால்தான், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் J.N.Uவில் தமிழுக்கு ஒரு தனி இருக்கை இருக்க வேண்டும் என்று விரும்பி, அதைச் செயல்படுத்திக் காட்டினார்!

15 ஆண்டுகள் கழித்து, இன்றைக்கு அந்த இருக்கையை தனி ஒரு துறையாக வளர்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த வகையில் 'தமிழ் இலக்கியவியல்' என்ற தனித்துறையை உருவாக்க 5 கோடியே 30 இலட்சம் ரூபாய் வழங்கினோம். J.N.Uவோடு பன்னோக்கு கலையரங்கத்திற்கு அருகே உலகப் பொதுமறை தந்த அய்யன் திருவள்ளுவரின் சிலையை நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சாகித்ய அகாதெமியும், J.N.Uவும் இணைந்து நடத்தும் இந்த விழா மூலமாக தலைவர் கலைஞர் அவர்கள் இந்திய இலக்கிய முகமாக அங்கீகரிக்கப்படும் நாளாக இது அமைந்திருக்கிறது.

இந்த நேரத்தில் இங்கு ஒரு செய்தியைக் குறிப்பிட விரும்புகிறேன்... இலக்கிய உலகில் பரவலாக அறியப்படும் செய்திதான் என்றாலும், அதை இந்த இடத்தில் பதிவுசெய்ய வேண்டியது அவசியம் என்பதால் சொல்கிறேன்... 'சாகித்திய அகாதெமி விருது' பெறும் படைப்பாளர்களுக்கும் வீடு வழங்க வேண்டும் என்று முடிவு செய்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளன்று, 'கனவு இல்லம்' என்று ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தினேன்.

இந்தத் திட்டத்தில் இதுவரைக்கும் 15 அறிஞர்களுக்கு தமிழ்நாடு அரசு கனவு இல்லம் வழங்கி இருக்கிறது! பரிசுத்தொகை ஒரு இலட்சம் என்றால், வீட்டின் மதிப்பு சுமார் ஒரு கோடி ரூபாய்க்கும் மேல்! அதுவும், அந்த வீட்டிற்கான பத்திரச் செலவு முதலான வற்றையும் தமிழ்நாடு அரசே ஏற்கிறது. 'கனவு இல்லம்' திட்டத்தின் நீட்சியாக சாகித்திய அகாதெமி மொழிபெயர்ப்பாளர் விருது பெற்றவர்களுக்கும் 'கனவு இல்லம்' வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, இதுவரை 10 மொழிபெயர்ப்பாளர்களுக்கு கனவு இல்லம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**எழுத்தாளரைப் போற்றும் சமூகமே உயர்ந்த சமூகம்!**

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இப்படிப்பட்ட திட்டம் இல்லை என்று சொல்லத்தக்க வகையில் இதனை நாம் செயல்படுத்தி இருக்கிறோம். இதற்கெல்லாம் ஒரே நோக்கம், படைப்பாளிகளை, அவர்கள் வாழும் காலத்திலேயே போற்ற வேண்டும் என்பதுதான்! எழுத்தாளரைப் போற்றும் சமூகம்தான் உயர்ந்த சமூகமாக இருக்க முடியும்! இந்தச் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக மக்களின் உயர்வுக்காக அவர்களின் சமூக விடுதலைக்காக முற்போக்குச் சிந்தனைக்காக இயங்கிய இயங்கும் எழுத்தாளர்களை தமிழ்ச் சமூகம் உச்சிமோந்து கொண்டாடத் தவறியதே இல்லை! அந்த வழியில்தான் தலைவர் கலைஞர் அவர்களும் தமிழ் இலக்கியவாதியாக இருந்து, சிறப்பான படைப்புகளைக் கொடுத்தது மட்டுமல்லாமல் சிறப்பான படைப்பாளிகள் அனைவரையும் அங்கீகரித்தார்! அரவணைச்சார்! அதுதான் அவரது தனிச் சிறப்பு!

இலக்கியவாதிகளுக்காக முத்தமிழறி ஞர் கலைஞர் செய்த ஏராளமான பணிகளில் பொன்னெழுத்துகளால் பொறிக்கத்தக்க ஒன்றுதான். தமிழ்நாட்டின் முதலமைச்சராக கலைஞர் பொறுப்பேற்ற காலங்களில் 108 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி, அவர்களின் மரபுரிமையர்களுக்கு நூலுரிமைத் தொகையாக 7 கோடியே 76 இலட்சம் ரூபாயை வழங்கியது! அத்தகைய தலைவர் கலைஞரின் அடியொற்றி, நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றது முதல் இந்த நான்கு ஆண்டுகளில் 36 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, நூலுரிமைத் தொகையாக 4 கோடியே 25 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது!

**நூலுரிமைத் தொகை ஏதுமின்றி - கலைஞரின் நூல்கள் நாட்டுடைமை!**

அதுமட்டுமல்ல, தன்னையே தமிழ்நாட்டுக்கு ஒப்படைத்த தலைவர் கலைஞர் அவர்களின் அனைத்துப் படைப்புகளும் நூலுரிமைத் தொகை ஏதுமின்றி, நாட்டுடைமை ஆக்கப்பட்டிருக்கிறது! 75 திரைப்படங்களுக்கு கதை திரைக்கதை வசனம், 15 புதினங்கள், 20 நாடகங்கள், 15 சிறுகதைகள், 210 கவிதைகள் என்று படைத்தவர் அவர்!

**கலைஞருக்கு - கலிபோர்னியா பல்கலைப் பேராசிரியர் புகழாரம்!**

இலக்கியத்துறையில் மட்டுமல்ல, அரசியலிலும் கழக உடன்பிறப்புகளுக்கு ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் 'கரிகாலன்' என்ற பெயரில் கேள்வி - பதில், தான் நடத்திய இதழ்களில் எண்ணற்ற தலையங்கங்கள், தன்னுடைய வாழ்க்கை வரலாற்றை ஆறு பாகங்களாக 'நெஞ்சுக்கு நீதி' என்று எழுதியதோடு கலைஞரின் படைப்புகள் 178 நூல்களாக வெளிவந்திருக்கிறது. இதெல்லாம் மட்டுமே ஏறத்தாழ ஏழு இலட்சம் பக்கங்களுக்கு மேல் இருக்கும்! இது அத்தனையையும் ஒருவர் படித்து முடிக்க வேண்டும் என்றாலே, ஒரு ஆயுள் தேவைப்படும்!

கலிபோர்னியா பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜார்ஜ் ஹார்ட் அவர்கள் "கலைஞர் போல் அத்தனை படைப்புகளை எழுத வேறொருவர் முயன்றால் அதற்கு ஒரு பிறவி போதாது" என்று சொன்னார்! அத்தகைய அறிவுப் புதையல்தான் தலைவர் கலைஞர்! கலைஞர் ஆட்சி என்பது, தமிழாட்சி! அதனால் தான், தமிழுக்கு செம்மொழித் தகுதியைப் பெற்றுத் தந்து, செம்மொழி மாநாட்டையும் உலகம் பாராட்டும் வகையில் நடத்திக் காட்டினார்! அவரின் வழித்தடத்தில், நம்முடைய திராவிட மாடல் அரசும் மொழிக்காக வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு ஏராளமான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி, தமிழாட்சியை நடத்தி வருகிறோம்!

**அடுத்த தலைமுறைக்கும் பயன்படும் - கலைஞரின் தமிழ்த் தொண்டு!**

**"தமிழாய்ந்த தமிழ் மகன்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக வருதல் வேண்டும்"** என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள். அத்தகைய தலைவரான முத்தமிழறிஞர் கலைஞரின் தமிழ்த் தொண்டினை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு சேர்க்க இந்தக் கருத்தரங்கம் பயன்படவேண்டும்! கலைஞரின் புகழ்பாடுவதாக மட்டுமல்லாமல், கலைஞர் உருவாக்க விரும்பிய சமத்துவ எண்ணமும், முற்போக்குச் சிந்தனையும் கொண்ட சமுதாயத்தை உருவாக்க இதுபோன்ற கருத்தரங்குகள் பயன்படவேண்டும்!

**படைப்பாளிகள் வாழும் காலத்திலேயே அங்கீகாரம் பெறவேண்டும்!**

தமிழ்ச் சமூகத்தில் முத்தமிழறிஞர் கலைஞரைப் போன்ற படைப்பாளிகள் உருவாக வேண்டும். படைப்பாற்றல் பெற்றவர்கள் தொடர்ந்து தங்களின் படைப்பை எழுதி வழங்க வேண்டும்! சிறந்த படைப்புகளை இதுபோன்ற அமைப்புகள் பாராட்ட வேண்டும்! படைப்பாளிகள் அவர்கள் வாழும் காலத்திலேயே அங்கீகாரம் பெற வேண்டும்! இதைத்தான் தமிழ்நாடு அரசு செய்து வருகிறது! சாகித்ய அகாதெமி போன்ற அமைப்புகளும் இந்தப் பணியை தொய்வில்லாமல் தொடர வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### தமிழே பேசத் தெரியாதவர்கள் தமிழ்நாட்டை

# டெல்லியிலிருந்து ஆள நினைக்கிறார்கள் - இதைத் தடுப்பதுதான் 'ஓரணியில் தமிழ்நாடு!'

### மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. பேட்டி!



**சென்னை, ஜூன் 29-**

**தமிழே பேசத் தெரியாதவர்கள் தமிழ்நாட்டை டெல்லியிலிருந்து ஆள நினைக்கிறார்கள். இதைத் தடுப்பதுதான் ஓரணியில் தமிழ்நாடு செயல்திட்டத்தின் நோக்கம் ஆகும் என்று செய்தியாளர்கள் சந்திப்பில் கழக மாநிலங்க ளவை உறுப்பினர் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், எம்.பி. தெரிவித்துள்ளார்.**

27.06.2025 அன்று மாலை திமுக மாநிலங்களவை உறுப்பினர் வழக்கறிஞர் பி.வில்சன் சென்னை தேனாம்பேட்டை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களை சந்தித்தது குறித்த அறிக்கை:-

ஓரணியில் தமிழ்நாடு என்கிற இந்தச் செயல் திட்டத்தை பற்றி விளக்கிக் கூற வந்திருக்கிறேன். சமீப காலமாகத் தமிழ்நாடு பண்பாடு - பொருளாதாரம் அரசியல் ரீதியாக பல அநீதிகளை சந்தித்து வருகிறது. கீழடி ஆய்வுக்கு அங்கீகாரம் அளிக்காதது, ஹிந்தி திணிப்பு, கல்வி நிதி மறுப்பு, கூட்டாட்சி முறையைச் சிதைப்பது, மக்கள் தொகை கணக்கெடுப்பைக் காலம் தாழ்த்துவது, நீட் தேர்வு மூலம் மாணவர்களின் மருத்துவக் கனவை சிதைப்பது, தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் நம் உரிமை குரலை நசுக்கி பிரதிநிதித்துவத்தை குறைப்பது என தமிழ்நாட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டு கொண்டே உள்ளது.

**ஒரு ரூபாயில் 26 பைசாதான் வழங்குகிறார்கள்!**

இது மட்டுமல்ல நம்ம கொடுக்கிற ஒரு ரூபாய் வரிப் பணத்தில் நமக்கு திருப்பி 26 பைசாதான் தருகிறார்கள். உங்கள் எல்லாருக்கும் தெரியும். மிக்ஜாங் என்ற ஒரு புயல் காரணமாக, மழையின் காரணமாக 2023ல் 37,902 கோடி சேதம் ஏற்பட்டு தமிழக அரசு இழப்பீடு ஒன்றிய அரசிடம் கேட்கும் பொழுது, வெறும் 276 கோடி மட்டும்தான் கொடுத்தார்கள். அது மட்டுமில்லை, அவர்கள் பாக்கி பணத்தை தராததால் உச்சநீதிமன்றத்தைத் தமிழக அரசு நாடியுள்ளது.

இது தவிர தேசிய கல்வி திட்டம் என்கிற பெயரில் மும்மொழி கல்வி திட்டத்தை திணிக்க பார்க்கிறார்கள். ஹிந்தியை கட்டாய கல்வியாகக் கொண்டுவர பார்க்கிறார்கள். அந்த ஹிந்தி திணிப்பை எதிர்த்ததால் 2152 கோடியை இன்று ஒன்றிய அரசு நமக்கு தராமல் வஞ்சித்துவிட்டது. இதை எதிர்த்து முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பெயரில் உச்சநீதிமன்றம் சென்றுள்ளோம்.

இதையெல்லாம் ஏன் சொல்றேன் என்றால், நமக்கு தர வேண்டிய பணம் நம்முடைய உரிமைகள் எல்லாவற்றையும் அவர்கள் தட்டி பறிக்கிறார்கள். அதைத்தான் சுட்டி காட்டுறேன். நம் தமிழ்நாட்டின் பெருமையையும் மாண்பையும் சிதைக்கத் திட்டமிடுபவர் கள், ஒரு உண்மையை மறந்துவிட்டார்கள். அவர்கள் மறைக்க நினைப்பது சிறிய சுடரை அல்ல; அது ஒரு உதய சூரியன் என்பதை மறந்துவிடுகின்றார்கள். உதய சூரியனை எவர் தடுத்தாலும், அதன் கதிர்கள் தடையை ஊடுருவி பிரகாசிக்கும். சூரியனின் குணமே தமிழ்நாட்டின் மக்களின் குணம்.

**அடக்குமுறைகளை தகர்த்து எழுச்சியுடன் தமிழ்நாடு எழும்!**

எவ்வளவு முறை எதிரிகள் முயன்றாலும், ஒவ்வொரு முறையும் அடக்குமுறைகளை தகர்த்து எழிச்சியுடன் தமிழ்நாடு எழும். நமது வானில் ஆபத்து மேகங்கள் சூழ்ந்த போதெல்லாம், இருளை அழித்து, வெற்றி வெற்றி வெளிச்சத்தை கண்டடைந்தவர்கள் தமிழ்நாட்டு மக்கள். ஏனெனில் தமிழர்கள் வெற்றி சூத்திரமே ஒன்றே ஒன்று தான். ஆபத்து வரும்போதெல்லாம் நாம் ஒன்றிணைவோம். நமது பலம் ஒருபோதும் குன்றியதில்லை. அச்சுறுத்தப்படுத்தும்போது நாம் ஒன்றுபடுகிறோம். ஒடுக்கப்படும் போது நாம் வீறு கொண்டு எழுகிறோம்.

இப்பொழுது தமிழ்நாடு மீண்டும் ஒரு முறை ஒன்றாய், ஓரணியில் திரண்டு நமது மண் மொழி மானம் மீது தொடுக்கப்படும் போருக்கு எதிராக போராடி வெல்ல தயாராகிறது. இந்த ஓரணியில் தமிழ்நாடுடைய நோக்கமே மண் மொழி மானம் ஆகிய மூன்றும் நாம் காக்க ஓரணியில் திரள வேண்டும் என்பதுதான்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நாம் கட்டி காத்துவந்த நமது மண்ணின் பெருமை, இப்பொழுது நமது இளைஞர்களின் கைகளில் உள்ளது. நமது முன்னோடிகள் நமக்காக போராடியது எல்லாம் எதற்காக வெறுமனே நாம் உயிர் வாழ்வதற்கா? இல்லவே... இல்லை. நாம் தலைநிமிர்ந்து சுயமரியாதை உணர்வோடு, பெருமையுடன் வாழவே அவர்கள் போராடினர். இன்றைக்கு நம்முடைய கீழடி ஆய்வுக்கு அங்கீகாரம் கொடுக்காமல் இருக்கிறார்கள். அந்த கீழடி ஆய்வு ரிப்போர்ட்டை தயார் செய்தவர் தூக்கி எறியப்படுகிறார்.

அந்த அளவுக்கு இவர்கள் தமிழ்நாடு மீது வெறுப்பை கொண்டுள்ளார்கள். இன்று இந்த வெறுப்பிற்கு எதிரான போராட்டத்தை முன்னெடுப்பது நமது ஒவ்வொரு ஒவ்வொருவரின் கடமையாக ஆகும். நமது குழந்தைகளுக்காகவும் இனி வரவேற்கும் நமது தலைமுறைக்காகவும் நாம் ஒன்றுபடுவோம். எந்த சக்தியாலும் வெல்ல முடியாத, எந்த கூட்டத்தாலும் உடைக்க முடியாத, எந்த வல்லமையாலும் தகர்க்க முடியாத மலைபோல் எழுவோம். நாம் ஒன்றாக ஓரணியில் நின்றால், நம்மை வீழ்த்த எவராலும் முடியாது. இதுவே ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பு.

எல்லோரும் ஒன்றாக இணைய வேண்டும். இணைந்து போராட வேண்டும் என்பதுதான் இதன் நோக்கமே. வடக்கில் பழவேற்காடு முதல் தெற்கில் கன்னியாகுமரி வரை மேற்கில் ஆணைக்கட்டி முதல் கிழக்கில் நாகப்பட்டினம் வரை ஜாதி மதம் அரசியல் சார்பு ஆகியவற்றைக் கடந்து ஓரணியில் நிற்கிறது தமிழ்நாடு. இது வெறும் பிரச்சாரம் அல்ல. தமிழ்நாட்டின் மண் மொழி மானம் ஆகியவற்றைப் பாதுகாக்க ஒன்றிணைந்து போராடி வெல்வதற்காக மாபெரும் முன்னெடுப்பு.

எங்களுடைய இலக்கு 45 நாட்களில் 68ஆயிரம் வாக்குச்சாவடி முகவர்கள் அவர்கள் மூலமாக இரண்டு கோடி குடும்பங்கள் சென்று பார்ப்பது. 100 சதவீதம் ஒரு கோடி குடும்பங்களை பதிவு செய்ய வேண்டும். இந்த இரண்டு கோடி உறுப்பினர்கள் சேர்க்கையும் சேர்க்க வேண்டும் என்பது எங்களுடைய இலக்கு. 30% உறுப்பினர்கள் அனைத்து வாக்கு சாவடிகளும் இணைக்க வேண்டும். இது தான் இலக்கு. இந்த ஓரணியில் தமிழ்நாடு என்ற முன்னெடுப்பின் மூலம் தமிழ்நாட்டு அனைத்து குடும்பங்களும் ஒரு குடையின் கீழ் ஒன்றாய் நாம் தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காக்க ஒன்றிணைவார்கள்.

**30 சதவிகித உறுப்பினர் சேர்ப்பு!**

இந்த பரப்புரை மூலம் திமுக உறுப்பினர்கள் அனைவரும் குறைந்தபட்சம் தமிழ்நாட்டின் ஒரு கோடி குடும்பங்களை ஒன்றிணைத்து ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு நகரத்திலும் ஒவ்வொரு வாக்கு சாவடிகளிலும் 30% மக்களை திமுக உறுப்பினராகப் பதிவு செய்வதே இலக்கு.

இந்த செயல் திட்டம் எப்படி செய்யப்படுகிறது என்பதை உங்களுக்குக் கூற விரும்புகிறேன். ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை செய்தியை வீடு வீடாகக் கொண்டு செல்லும் வகையில் திமுகவின் கடைநிலை நிர்வாகிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பிடிஏ வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் புதியதாக 68000 வாக்குச்சாவடிகள் உருவாக்கப்பட்டுள்ளார்கள். இந்த வாக்குச் சாவடி டிஜிட்டல் மூவர்கள் எனும் புதிய டிஜிட்டல் போராளிகளுக்கு கழகத்தின் சார்பில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்த 68000 வாக்கு சாவடி டிஜிட்டல் முகவர்கள் ஓரணியில் தமிழ்நாடு பரப்புரைக்காகத் தனித்துவமாக உருவாக்கப்பட்ட செயலி சமூக ஊடங்களைக் கையாளும் வகையில் இதற்காக ஒரு பயிற்சி தனியாக அளிக்கப்படுகிறது. வருகிற ஜூன் 28 மற்றும் ஜூன் 29ஆம் தேதியில் பயிற்சி பெறுவார்கள். ஏற்கனவே ஜூன் 25ஆம் அன்று கழக தகவல் தொழில்நுட்ப அணிக்கு மாநில அளவான பயிற்சி முகாம் நடைபெறும்.

ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை தனித்துவமான மூன்று நாள் நிகழ்வாக தொடங்கப்படும். முதல் நாள் அதாவது ஜூலை 1 மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் பத்திரிகையாளர்கள் சந்திப்பின் மூலம் பரப்புரையை தொடங்கி வைப்பார். பின்னர் 38 மாவட்ட தலைநகரங்களும் பத்திரிகையாளர்கள் சந்திப்பு நடைபெறும். இரண்டாம் நாள் அதாவது ஜூலை 2 அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் தமிழ்நாட்டு இளைஞர்களுடன் இணைந்து ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை தொடக்கத்தை குறிக்கும் வகையில் 76 கழக மாவட்டங்களிலும் நடை பயணமாக ஒற்றுமை பேரணியை மேற்கொள்வார்கள். அடுத்து மூன்றாம் நாள் அதாவது ஜூலை 3 கழகத்தின் பிரத்தியோகிய பரப்புரை குழு அனைத்து வீட்டிற்கும் சென்று பரப்புரை செய்தியை எடுத்து கூறி, ஒவ்வொரு குடும்பத்தையும் ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பின் கீழ் பதிவு செய்யும்.

ஒரு தனி தத்துவ பரப்புரை குழு உருவாக்கப்படும். இதில் ஒரு வாக்குச்சாவடி பாக முகவர், ஒரு வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர், ஒரு இளைஞர் பிரதிநிதி, ஒரு பெண் பிரதிநிதி, எட்டிலிருந்து 10 உள்ளூர் வாக்குச்சாவடி மேலாண்மை குழு, பிஎல்சி உறுப்பினர்கள் இடம்பெறுவார்கள். இது வந்து இந்த வாக்குச்சாவடி பரப்பரை குழுவுக்காக உள்ள இந்த காம்போசிஷன். வாக்குச்சாவடி பரப்புரை குழு ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று ஒவ்வொரு குடும்பத்துடன் ஏழிலிருந்து 10 நிமிடங்கள் கலைந்துரையாடி ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தின் நோக்கத்தை விளக்கி உறுப்பினர் படிவம் மூலம் அக்குடும்பத்தை ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைப்பார். ஆர்வமுள்ளவர்கள் கழகத்தின் உறுப்பினர்களாக பதிவு செய்வார்கள்.

தமிழே பேச தெரியாதவர்கள் தமிழ்நாட்டை டெல்லியிலிருந்து ஆள நினைக்கிறார்கள். இதைத் தடுப்பதுதான் ஓரணியில் தமிழ்நாடு செயல்திட்டத்தின் நோக்கம் ஆகும்.

இவ்வாறு மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. பேட்டியளித்தார்.

---

### கரூர் மாவட்டத்தில் 'ஓரணியில் தமிழ்நாடு'

# புதிய கழக உறுப்பினர் சேர்க்கைக்கான BLA2, BDA வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள், பூத் இளைஞர் அணி பயிற்சி முகாம்!

### முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. அறிக்கை!



கரூர், ஜூன் 29 -

கரூர் மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ., விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் வழிகாட்டுதலின்படி ஓரணியில் தமிழ்நாடு பரப்புரைச் செய்தியை வீடு வீடாக கொண்டுச் செல்லும் வகையில் கடைநிலை நிர்வாகிகளுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் கரூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை சட்டமன்ற தொகுதி BLA 2, BDA (வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள்), மற்றும் பூத் இளைஞர் அணி நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொள்ளும் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பயிற்சி முகாம் நடைபெற உள்ளது.

**29.06.2025 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| காலை 10.00 மணி | கரூர் | பிரேம் மஹால் கரூர் |
| மதியம் 12.00 மணி | அரவக்குறிச்சி | அம்மையப்பர் மஹால், நொய்யல் |
| மதியம் 2.00 மணி | கிருஷ்ணராயபுரம் | எஸ்.கே.பி. மஹால், மணவாடி |
| மாலை 4.00 மணி | குளித்தலை | சுபம் மஹால், அய்யர்மலை |

மேற்கண்ட பயிற்சி முகாமில் கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை BLA-2, BDA (வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள்), மற்றும் பூத் இளைஞர் அணி நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கரூர் மாநகராட்சி பெரிய குளத்து பாளையத்தில் மண்டலம் 1 அலுவலகம், பசுபதிபுரம் தெற்கு மடவளாகம் பகுதியில் மண்டலம் 2 அலுவலகம் ஆகியவற்றை கரூர் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட கழக செயலாளருமான வி.செந்தில் பாலாஜி திறந்து வைத்தார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், கிருஷ்ணராயபுரம் எம்.எல்.ஏ. க. சிவகாமசுந்தரி, மேயர் கவிதா கணேசன், துணைமேயர் தாரணி சரவணன், ஆணையர் சுதா, மண்டலக்குழுத் தலைவர்கள் அன்பரசு, சக்திவேல், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் அருகில் உள்ளனர்.